Tamil Heritage Foundation International Digital Library EBook collection



# மெய்வாழ்க்கை கண்டறிந்த வேந்தன்.

## புத்தர் ஞானம்.

(முருகதாசன் எழுதுகிறார்.)

பம்பிசாரனது யாகத்தை நிறுத்தி சகலருக்கும் ஜீவகாருண்யமுண்டாகச் செய்துவிட்டு கயாவை நோக்கிப்போகும் போது மலையிலிருந்த அலரான், உத்ரான் என்றவர்களும் மற்றும் சிலரும் சாஸ்திர சம்பந்தமாக விவாதித்து அவரைத் தடுத்தார்கள். மனோவாக்குக் காயங்களுக்கு மெட்டாமல் நிர்மலானந்தமாய் நிற்கும் பிரம்மம் ஒன்றே என்று சொல்லும் ஞானகாண்டத்திலும் உயர்ந்த ஞானத்தை மனிதன் எப்படி அடையமுடியும்? காமக்குரோத மத மார்ச்சல்லியங்களை அடக்கி பெரிய மௌனத்தின் வைப்பாகிய சச்சிதாநந்தத்தில் மூழ்கும் கர்மகாண்டத்திற் சொல்லியிருப்பதைவிட நல்ல வழியில் மனிதன் எப்படி நடக்கமுடியும்? என்றார்கள். ஆனால் கௌதம சாக்கிய முனியாகிய நமது புத்தர் திருப்தியடையாமல் சத்தியத்தைத் தேடி பின்னுமலைந்துபோதி (அரசமரம்)மரத்தைவந்தடைதல்வருமாறு:—

வங்காளத்திலிருந்து வடமேற்கு முகமாக ஒருவன் போவானாகில், நிலாஜன, மொகானை என்ற இரண்டு சிற்றாறுகள் உற்பத்தியாகும் குன்றுகளில் வந்து சேருவான். அவ்வாறுகளோடும் வழியைத்தொடர்ந்து சென்றால் அவையிரண்டும் சேர்ந்து பல்கு என்ற பெயருடன் கயாவுக்குச் செல்லும் வழியிலுள்ள சமநிலத்தைக் காணலாம். அங்கதிக்குச் சமீபத்தில் அங்கு மிக்கும் சிலமணற்குன்றுகள் பொருந்தியதாய் முட்புதர்களே மிகுந்த ஒரு சமவெளிபடர்ந்திருக்கிறது. இவ்வெளியினோரத்தில் மரங்களடர்ந்த ஒரு காடு தொடங்குகிறது. அதினிடையில் பலவித மீன்கள் களித்துக்குதிக்கும் ஒரு சிற்றோடை அழகாய்ப் பிரகாசித்துக்கொண்டு சலசல வென்று ஓடுகிறது. அப்பால்ஆடுமாடுகளைக்காப்பற்றிக் காலங்கழிக்கும் கள்ளங்கபடறியாத ஜனங்கள் வசிக்கும் ஸெநாநி என்னுங் கிராமம் தென்னந்தோப்புகளால் சூழப்பட்டு அருகே தோன்றுகிறது.

அந்தக் காட்டின் மத்தியில் புத்தமுனியானவர் மனிதரின் துன்பத்தையும், விதியின் வழியையும், ஆகாயத்தின் இந்திரதனுசுபோல் பொய்மையான இவ்வாழ்வையும்பற்றி சிந்தித்துக்கொண்டு வெகுகாலம் வாழ்ந்துவந்தார். சில சமயங்களில் இவ்விதமான தியானத்தில் போவதுகூடத் தெரியாமலிருந்து விடுவார். கடைசியில் கண்விழிக்கும்போது தம் பிச்சைப்பாத்திரம் நிறையாமலிருப்பதைக் கண்டு குரங்குகள், கிளிகள் மரத்தினின் றுதிர்க்கும் கனிகளைத்தின்று வயிற்றை நிரப்புவர். வசந்தகாலத்தில் இளந்தளிரின் அழகிய மரத்திலிருந்து உலர்ந்து உதிரும் சருகுகளில் காணப்படும் அளவுகூட தன்னுட்டிற்கெல்லாம் மகிழ்ச்சி கொடுத்துக்கொண்டிருந்த சித்தார்த்தன் (புத்தர்)அழகு அவரிடத்து அப்போது காணப்படவில்லை.

ஒருநாள் புத்தர்களைப்பினால் மூர்ச்சித்து இறந்தவர்போல் கீழே விழுந்து கிடந்தார். அப்பொழுதவ்வழியாகவந்த ஒரு ஆட்டிடையன் இப்படியவர் வெயிலில் கிடப்பதைப் பார்த்து அருகே நின்ற சம்புவிருக்ஷங்களின்று கிளைகளையொடித்து சிறு பந்தலிட்டு, தான் அவரைத் தொடப்பயந்து ஒரு வெள்ளாட்டின் மடியைப் பிதுக்கி அப்படியே அவர்வாயில் சிறிது பால்வார்த்தான். உடனே புத்தர் மூர்ச்சை தெளிந்து விழித்துக்கொண்டு அவனது பாத்திரத்திற் கொஞ்சம் பால் கறந்து கொடுக்கும்படி வேண்டிக்கொண்டார். அதற்கவன் ஐயா! நானோ சூத்திரன்; கொடுப்பது தகுதியன்று; நான் தொட்டால் தாங்கள் அசுத்தமாவீர்களென்றான். புத்தர் அவனைப் பார்த்து துன்பமும் இரக்கமும் மனிதர்கள் எல்லாரையும் பந்துக்களாக்குகிறது; எல்லாரிடத்திலுமே ஒரே மாதிரி வெந்திருக்கும் இரத்தத்திற்கும் எல்லாரிடமும் ஒரேவிதமாய் உப்புக்கரித்திருக்கும் கண்ணீருக்கும் ஜாதி பேதமில்லை; மனிதன் தாய் வயிற்றினின்று பிறக்கும்பொழுது நெற்றியில் விபூதியும் தோளிற் பூணூலும் தரித்துப் பிறப்பதில்லை; நல்லது செய்பவனே துவிஜன்; கெட்டது செய்பவனே சூத்திரன் ஆகையால் எனக்கிப்பொழுது கொடுப்பதைக் கொண்டு ஒரு தீங்குமில்லை என்று சொல்ல அவ்விடையன் மனமகிழ்ந்து கொடுத்தான்.

மற்றொரு நாள் அவர் இருந்தவிடத்தின் வழியாக சில கூத்தியர்கள் மத்தளமடிப்பவன், தம்பூர்மீட்டு பவன் ஆகியவருடன்போய்க்கொண்டிருந்தார்கள். அவர்களது பால சிலம்புகள் கால்களைச்சுற்றிக் கூதம்பாட, கைவளையல்கள் கலகலவென்று சப்திக்க அவர்கள் வெகு உல்லாசமாக நடந்து போனார்கள். அப்போது தம்பூரைக் கொண்டு போனவன் தம்பூரைமீட்ட அவன் பக்கத்திலிருந்தவள் பின் வரும் கருத்துள்ள பாட்டைப்பாடினாள்.

---

# ஒரு கெட்ட வழக்கம்.

## காளைகளுக்குக் காயடித்தல்.

### மகாத்மாவின் அபிப்பிராயம்

மகாத்மா காந்தி "யௌவன இந்தியா" பத்திரிகையில் எழுதுவதாவது:- நமது வாழ்வில் நாம் செய்யும் சில காரியங்கள்ஒன்றுக்கொன்று முரண்பாடாயிருக்கின்றன. இந்நாட்டில் பசுக்களின் கேவலமான நிலைமைக்கு நமது வழக்கமொன்று காரணமாயிருக்கிறது. தங்களுக்குச் சொந்தமான பசுக்கள் ஈன்ற காளைகளைப் பலர் காயடிப்பது பாபமென்று கருதுகிறார்கள். ஆயினும் தங்களுடைய பண்ணைகளுக்குப் பிறரிடமிருந்து (தொழில் முறையில் கடைவைத்துக் காயடிப்பவர்களால்) காயடிக்கப்பட்ட காளைகளை வாங்கி உபயோகிக்கத் தயங்குவதில்லை. இது எப்படியிருக்கிறதென்றால், மாம்ச போஜனம் செய்யும் ஒருவர் தாம் நேராக ஆடு மாடுகளைக் கொல்லாமல் பிறரால் வதைக்கப்படும் மிருகங்களின் மாம்சத்தையே மார்க்கட்டில் வாங்கிச் சாப்பிடுவதாகச் சொல்லுவதற்கு ஒப்பாகும். மாம்சத்துக்கும் குரோம் தோலுக்கும் கிராக்கியிருப்பதால் தான் மாடுகள் அடிக்கப்படுகின்றன. மாம்சத்தையும் குரோம் தோலையும் உபயோகிப்பவருக்குத்தான் அந்த பாபம் போய்ச்சேரும். அதுபோல காயடிக்கப்பட்ட எருதுகளுக்கு கிராக்கியிருப்பதாலேயே தொழில் முறையில் உள்ளவர்கள் காயடித்து அவற்றை விற்கிறார்கள். அத்தகைய காளைகளை வாங்குவதை நிறுத்தினால் காயடிப்பது நின்றுவிடும். காயடித்த காளைகளை வைத்துக் கொள்வது நீராகென்று தோன்றினால் தங்களுடைய சொந்தவீட்டிலேயே தங்களுடைய பசுக்கள் ஈன்ற மாடுகளுக்குக் காயடித்துவைத்துக்கொள்ள ஏன் ஸங்கோசப்படவேண்டும்? சொந்தத்திலேயே அந்தவேலையைச் செய்தால் மலிவாகக் காளைகள் அகப்படும். அதிக விலை கொடுத்துப் பிறரிடமிருந்து வாங்க வேண்டியிராது. பிறரிடமிருந்து வாங்குவதென்று ஏற்பட்டபின் பசுக்களை யாவரும் வீட்டில் வைத்துக் கொள்வதில்லை. அநேக ஊர்களில் பசுவுக்குப்பதிலாக எருமைகள் தான் தென்படுகின்றன. ஒன்றிரண்டு பசுக்களை வைத்திருப்போரும் விற்று விடுகின்றனர். எருமைகளை வைத்துக் கொண்டு வெளியாரிடமிருந்து காயடித்த மாடுகளை அதிகவிலை கொடுத்து வாங்குவதைவிட, பசுக்களை வீட்டில் வைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டிய காயடித்த காளைகளை வீட்டிலேயே தயாரித்துக் கொள்வது சுலபம்; மலிவாகவும் இருக்கும். பசுவை ஆதரிக்காதவரும் ரட்சிக்காதவரும் பசுக்களுக்கு விரோதியாவர்.

---

# ஸத்திய தரிசனம்.

## மகாத்மா காந்தியின் ஜீவியசரித்திரம்.

2-ம் பாகம்.

அத்தியாயம் 24.

சென்றவார "யௌவன இந்தியா"வில் மகாத்மா எழுதுவதாவது:—

தென்னாப்பிரிக்காவில் 3 வருஷம் இருந்து விட்டேன். ஜனங்களின் குறைகளையும் அபிலாஷைகளையும் அதற்குள் தெரிந்துகொள்ள முடிந்தது. என்னையும் அவர்கள் நன்கு தெரிந்துகொள்ளச் சாவகாசமேற்பட்டது. 1896-ல் நான் ஊருக்குப்போய்வர விரும்பினேன். போய்த்திரும்ப 6 மாதம் செல்லுமென்று பட்டது. பாரிஸ்டர் தொழிலில் சுமாராகவரும்படி கிடைத்துக் கொண்டிருந்தது. நான் அங்கேயேதாமதிப்பதால் தங்களுக்கு அனுகூலமுண்டென்று பலர் நினைத்தார்கள். ஆகையால் ஊருக்குப்போக அவர்களுடைய அனுமதியைக் கேட்டேன் என் மனைவி குழந்தைகளை அழைத்துவரவிரும்பினேன். மேலும் ஊருக்குப் போனால் தென்னாப்பிரிக்கா இந்தியர்களைப்பற்றி அக்கு இந்தியருக்கு எடுத்துச் சொல்லி பொதுஜன ஸேவை சிறிது செய்யலாமென்று பட்டது. 3 பவுன் வரிசகிக்க முடியாமலிருந்தது. அதை ஒழிக்கும் வரையில் மனசாந்தி யேற்படுவதற்கில்லை.

ஆனால் நான் ஊருக்குப் போனபின் காங்கிரஸ் வேலையைத் தென்னாப்பிரிக்காவில் யார் நடத்துவது; கல்விச் சங்கத்தின் வேலை எப்படி நடப்பது என்று நான் சிந்திக்கலானேன். ஆதம் ஜிமியாகான், ரஸ்டோம்ஜி ஆகிய இருவருடைய பெயர்களும் என் ஞாபகத்துக்கு வந்தது. வர்த்தகர்களில் பலர் காங்கிரஸ் தொண்டில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் காரியதரிசி பதவியை ஏற்றுக்கட்டுப்பாடாக வேலை நடத்தக்கூடியவர்கள் அவ்விருவர்தான். ஆதம் ஜிமியாகானுக்கு ஆங்கிலந் தெரியுமாகையால் அவருடைய பெயரைச் சிபார்சு செய்தேன். அது ஒப்புக்கொள்ளப்பட்டது. அவருடைய விடாமுயற்சியாலும் மரியாதையான நடத்தையாலும் புத்தியாலும் பலருடைய விடாப்ரீதிக்கு அவர் ஆளானார். காரியதரிசி வேலைக்கு ஒரு பாரிஸ்டர் இன்றியமையாதவரல்லவென்று பின்னிட்டு எனக்குத் தோன்றும்படி அவர் திறமையாக வேலை செய்தார். 1896-ம் வருஷ மத்தியில் நான் கல்கத்தாவுக்குப் புறப்பட்ட பொங்கோலாஎன்ற கப்பலில் சுய தேசத்திற்குப் பிரயாணமானேன். கப்பலில் அதிக பிரயாணிகள்இல்லை. இரண்டு ஆங்கில உத்தியோகஸ்தர்கள் இருந்தார்கள். அவர்களோடு நான் நெருங்கிப் பழகினேன். தினம் 1—மணி நேரம் அவர்களில் ஒருவரோடு சதுரங்கம் ஆடுவேன். கப்பல் வைத்தியர் எனக்குத் 'தமிழ் போதகாசிரியர்' என்ற புத்தகமொன்று கொடுத்தார். அதைப் படிக்கவாரம்பித்தேன். தென்னாப்பிரிக்காவில் நான் மதராஸ்காரர்களுடன் பழகுவதற்குத் தமிழும், முஸல்மான்களுடன் பழக உருதுவும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமென்று எனக்கு நெட்டாலில் இருக்கும்போதேபட்டது. கப்பலில் ஓர் உருது முன்ஷியின் உதவியும் கிடைத்தது. உருது வார்த்தைகள் எனக்கு சுலபமாகப் புரிவதில்லை. என்னைவிட அந்த ஆங்கில உத்தியோகஸ்தர் நன்றாக உருதுகற்றுக்கொள்ள முடிந்தது. தமிழ்கற்றுக் கொள்வதில் சுமாராக அபிவிருத்தி யேற்பட்டது. பிறருடைய உதவியில்லாமல் அப்புத்தகத்தைப் படிக்கமுடிந்தது. இந்தியாவுக்குப் போய்ச் சேர்ந்த பிறகும மேற்படி பாஷைகளைத் தொடர்ந்து கற்க நான் விரும்பினேன். ஆனால் சாத்யப்படவில்லை. சிறைச்சாலைகளில் இருந்தபோதுதான் படிக்க சாவகாசம் கிடைத்தது. அதனால் இன்னும் கொஞ்சம் அபிவிருத்தியேற்பட்டது. தென்னாப்பிரிக்கா சிறையில் தமிழ் படித்தேன், எரவாடாவில் உருது படித்தேன். ஆனால் தமிழில் பேச நான் கற்றுக் கொள்ளவேயில்லை. இப்போது பழக்கமேயில்லாததால், வாசிக்கக் கற்றதும் மறந்து வருகிறது.

தமிழ் தெலுங்கு தெரியாதது இன்னமும் பெரிய கஷ்டமாகத்தான் இருக்கிறது. தென்னாப்பிரிக்கா தமிழர் என்னிடத்தில் காட்டிய அன்பை நான் ஒருபோதும் மறக்கமுடியாது. அவர்களுடைய உழைப்பையும் தியாகத்தையும் மறக்கமுடியாது. அவர்கள் பெரும்பாலும் படிப்பு வாசனையில்லாதவர்கள். படியாதவர்கள் தான் அங்கு திறமையாகப் போராடினார்கள். ஏழைகளுக்காக அங்கு போராட்டம் நடந்ததால், ஏழைகள் அதில் பங்கெடுத்துக் கொண்டனர். அவர்களுடைய மனதைத் திடப்படுத்தவும், தைரியமூட்டவும், தமிழ் தெரியாதிருந்தது ஒரு தடையாயில்லை. அரைகுறையாக அவர்களுக்கு ஹிந்துஸ்தானியும் ஆங்கிலமுந்தெரியும். தமிழ் தெலுங்கு கற்பதன் மூலமாக அவர்களுடைய ப்ரீதியை அதிகமாகப் பெற விரும்பினேன். தெலுங்கு இந்தியாவுக்கு வந்த பிறகுதான் கற்க வாரம்பித்தேன். ஆனால் அரிச்சுவடிக்கு மேல் போகவில்லை. ஆயினும் தமிழ்தெலுங்கு முதலிய பாஷைகளை நான் கற்கமுடியுமென்ற தைரியமிருக்கிறது. அதுபோல் தமிழ் நாட்டாரும் ஹிந்துஸ்தானி கற்க முடியுமென்று நம்புகிறேன். ஆங்கிலம் படித்தவர்கள் தேசபாஷை கற்பது ஒரு தடையாயிருக்கக்கூடாது. அது தடையும் ஆகாது.

நிற்க, 'பொங்காலா' கப்பல் தலைவர் எனது நண்பராகிவிட்டார். பாரமார்த்தீக விஷயமாக இருவரும் கப்பலில் விவாதிப்போம். ஏசுநாதரிடத்திலும் அவர் தியாகத்திலும் நம்பிக்கை வைத்தால் பாப விமோசனம் கைமேல் வரும் என்று அவர் சொல்லுவார். ஸன்மார்க்கக் கட்டுப்பாடு அவருக்குப் பிடிக்காது. நான் ஏன் மாம்சம் சாப்பிடக்கூடாதென்று அவர் விவாதிப்பார். நமக்காகவல்லவோ தெய்வம் மிருகங்களை சிருஷ்டித்திருக்கிறதென்று அவர்கேட்பார். ஆனால் நாங்கள் இருவரும் முடிவில் ஒத்துப்போக முடியவில்லை. மதம்வேறு, ஸன்மார்க்கம் வேறு என்று நான் கருதமுடியவில்லை; ஆனால் அந்த அபிப்பிராயத்தை அவர் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். 24 தினங்கள் கழிந்து கல்கத்தாவில் கப்பல் வந்திறங்கியது. நேராக பம்பாய்க்கு வண்டியேறினேன்.

---

பஞ்சமன் உள்ளே வரக் கூடாதாம். ஆனால் பஞ்சம தாசில்தார் உள்ளே வந்து நாற்காலியில் உட்காரலாம்; பஞ்சம டாக்டர் தொட்ட மருந்து நீரைப் பருகலாம். ஈதென்ன ! அந்தஸ்தின் முன்பு ஜாதி பேதம் தவிடு பொடி யாகும்போலும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஜாதியா, மதமா— எது விசேஷம்?

நாம் எல்லோரும் நாடார்; க்ஷத்திரிய மரபில் தோன்றியவர்கள்; சான்றோர் குலத்தவர்கள்; ஒரே தாயின் பிள்ளைகள்; ஏக சகோதரர்கள். இப்படிப்பட்ட நாம் சகல விஷயத்திலும் ஒற்றுமையுடன் வாழ வேண்டியது நமது கடமை. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள்வோம். அதில் இருக்கப்பட்ட சகோதரர்கள் எவ்வளவு ஒற்றுமையாய் வாழ்கிறார்கள். சில குடும்பங்களில் தங்களுக்குள்ள அற்ப விவகாரங்களால் பிரிவினை இருக்கலாம்; என்றாலும் அக்குடும்பத்திலுள்ள ஒரு சகோதரனை இன்னொரு அந்நியன் உபாதிக்கக் கண்டால் சகோதரன் மனம் சகிக்குமா? சகியாதே.

இப்படியிருக்க 8—11—26—ல் நடந்த சென்னை சட்டசபை எலெக்ஷனில் நம் குல மக்களில் சிலர் சகோதர வாஞ்சையற்று ஜாதித் துவேஷிகளாய் அந்நியருக்கு ஓட் கொடுத்ததை நினைக்க ஆச்சரியமாயிருக்கிறது.

மத விஷயமாய் எடுத்துக்கொண்டால் இந்து நாடார் கத்தோலிக் கிறிஸ்தவ நாடார், பிராட்டஸ்டண்டு கிறிஸ்தவ நாடார் எனப் பிரிக்கலாம். ஒரு ஜன சமூகம் பிரிவினைக்குட்பட்டால் சகோதரர் ஆவார்களா?

மதத்தையும், அதன் கொள்கைகளையும் அவரவர் தெய்வ வழிப்பாட்டுக்கும், வணக்கத்திற்கும், பக்திக்கும், ஆத்ம நன்மைக்கும் ஏதுவாக உபயோகிக்க வேண்டியதே தவிர, பொது ஜன சேவைக்கு உபயோகிப்பது தவறல்லவா? அப்படி உபயோகிப்பின் நாம் சகோதரர்களாவோமா?

ஒரு ரோமான் மார்க்கக் கிறிஸ்தவன் எப்படி பூணூல் அணியலாம்? அது அவர்கள் மார்க்கத்தில் சொல்லப்படாத விஷயமே. அது கிறிஸ்து மத கொள்கைக்கும் விரோதமானதே. என்றாலும் மதத்தை விட ஜாதியை மேலாக எண்ணியல்லவோ அணிந்திருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட கூட்டத்தாரிலுள்ள சிலர் ஜாதியைக் கருதாமல் நாம் அறியாதவரும், அந்நியரும் நமது ஜில்லாவாசியுமல்லாத இன்னொருவருக்கு ஓட் கொடுத்தது விந்தையாயிருக்கின்றது.

கேவலம்! பணத்திற்காக செய்தார்கள் என்று நாம் எண்ணவோ, அல்லது மத அபிமானத்தோடு செய்தார்கள் என்று எண்ணவோ? நேயர்களே யோசித்துக் கொள்ளலாம் என ஒரு கிருபர் எழுதுகிறார்.

## கிராமப் பஞ்சாயத் எலெக்ஷன்.

சென்னை கவர்ன்மெண்ட் 1920 ம் வருஷத்திய 15-வது ஆக்ட் சட்டத்தின்படி திருசெந்தூர் தாலுகாவிலுள்ள அர்ஜூர் ரெவினியூ கிராமத்தில் வில்லேஜ் பஞ்சாயத் ஸ்தாபிக்கக் கோரி அக்கிராம ஜனங்கள் விண்ணப்பித்துக் கொண்டபடி சாங்கிஷனுகி ஷை பஞ்சாயத்திற்கு 9 மெம்பர்களைத் தேர்ந்தெடுக்க நாளது 27—10—26ல் இடைச்சிவிளை, கருப்புக்கட்டி ஆபீஸ் முன்புறத்தில் வைத்து தூத்துக்குடி டிவிஷன் ஆனரெரி ஆர்கனைசரான ஸ்ரீமான் க. பி. கெங்கை ஆதித்த நாடாரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் எலெக்ஷன் நடைபெற்றது. ஸ்ரீமான்களான 1. ஜெ. ஆபிரகாம் நாடார், 2. பி. டி. இரத்தினஸ்வாமி நாடார், 3. கே. துரைச்சாமி நாடார், 4. ச. கோயிற்பிள்ளை நாடார், 5. இ. சுப்பிரமணிய கோனார், 6. கு. பெரியஸ்வாமி நாடார், 7. வீ. ச. சிவசூரியம் பிள்ளை, 8 அ. ச. அருணாசலத் தேவர், 9. ஆ. ஜெபஞான நாடார் ஆகிய ஒன்பது பெயர்களும் மெம்பர்களாகவும், ஸ்ரீமான் ஜே. ஆபிரகாம் நாடாரவர்கள் ஷை பஞ்சாயத் பிரஸிடெண்டாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஷை பஞ்சாயத்தின் ஆதரவில் தச்சன்விளை மஜராவில் சர்க்கார் கிராண்டுடன் புதிதாகப் பஞ்சாயத் ஸ்கூலும் ஸ்தாபிக்கப்படுமெனத் தெரிகிறது என்று ஒரு கிருபர் எழுதுகிறார்.

## பத்திரிகாபிமானம்.

தமிழ்த்தாய்ப் புதல்வர்களாகிய நாம் அனைவரும் சகல அபிமானங்கட்குடையோராகவிருக்கின்றோமல்லவா? அவ்விதமே பத்திரிகாபிமானமும் உள்ளோராகவிருக்க வேண்டியது அவசியமல்லவா? சகலதேசமும் முன்னேற்றமடைதற்கு சாதகமானது பத்திரிகையே யென்பதை யாரும் மறுக்கார்கள். ஒரு நூலை வாசிப்பதால் அதில் அடங்கிய விஷயத்தையே தெரிகிறோம். தேசாபிமானம் உள்ள ஒரு பத்திரிகை படித்து வருவோமேயாகில் நாம் கண்டிராததும், கேள்விப் படாததுமாகிய எவ்வளவோ அபூர்வ விஷயங்களை அறிய ஏதுவாமாகிறது. பிறநாடுகளில் பத்திரிகாபிமானம் ஏராஸ்திரப்பட்டதாக நாம் நமது பத்திரிகையிலேயே காண்கிறோமல்லவா. நமது பாரத பூமியில் தற்போது பத்திரிகாபிமானம் ஏற்பட்டிருக்கிறதெனினும் சிலருக்கு அது வெறுப்பாகவே இருந்து வருகிறது. சில நாட்களுக்கு முன்யான் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கும் சமயம் ஒருவர், காசைக் கரியாக்கவா பத்திரிகை பார்க்கிறீர்கள் என்றார். 1922-ல் எனது நண்பர் ஒருவரை எனது சிபார்ஸின் பேரில் "நாடார்குல மித்திர"னுக்கு சந்தாதாரராக்கினேன். பின் 1923-ல் வி. பி. யில் வந்த மித்திரனை (போஸ்ட்மேன்) தபால்காரனிடம் இவ்விடத்தில் ஆள் இல்லையென்பதாக திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்தனர். நாம் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் பயனில்லாது போய் விட்டது. என் செய்வது அன்னாரின் அறியாமைக்கு! பாரத நாட்டு சிங்கங்காள்! இனியாவது நாம் அனைவோரும் பத்திரிகாபிமானம் கொள்ளின் நமக்கு பாரதத் தாயின் கிருபையால் சகல செல்வமும் கிட்டுமென்பதுண்மை.

சா. சி. வேள்ளைச்சாமி,
தேக்கோன்.

## கமுதியில் சமாதானக் கொண்டாட்டம்.

இந்த சமாதானக்கொண்டாட்டமானது இந்த மாதம் 11-தேதி வியாழக்கிழமை கமுதி கே. ஏ. வி. நாடார் உயர்தரப்பாடசாலையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. காலை $10\frac{1}{2}$-மணிக்குப் பிள்ளைகளும் உபாத்தியாயர்களும் பள்ளிக்கூடத்து ஹாலில்கூட, ஷை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் மிஸ்டர் பி. எம். ஞானையா என்பவர் யுத்தத்தைப்பற்றியும் அதன் முடிவு சமாதானத்தைப்பற்றியும் ஒரு பெரிய உபந்நியாசஞ்செய்தார். பின்பு மணி 11 அடிக்கவும் எல்லாரும் எழுந்திருந்து 2 நிமிஷம் அமைதியாக யுத்தத்தில் மாண்டவர்களைப்பற்றிச் சிந்தித்தனர். அதே சாயங்காலத்தில் பிள்ளைகளுக்கு விளையாட்டுகள் ஸ்கூல் காம்பவுண்டில் நடத்தப்பட்டன. ரெவரெண்டு தேவசகாயம் நடத்தினார்கள். இது முடிந்ததும் ஷை ஸ்கூல் ஹாலில் மகா-ள-ள-ஸ்ரீ சேஷஐயங்கார் பி. ஏ. எல். டி. டிப்டி இனஸ்பெக்டரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. ரெவரெண்டு தேவசகாயம் என்பவர் யுத்தத்தைப்பற்றியும் அதன் முடிவைப்பற்றியும் ஓர் நல்ல உபந்நியாசஞ்செய்தார். இது முடிந்ததும் அக்கிராசனாதிபதி விளையாட்டில் வெற்றிபெற்ற பிள்ளைகளுக்குப் பரிசு அளித்தார். பின்பு முடிவுரையாக சில வார்த்தைகளைப்பேசிவிட்டு, உபந்நியாசஞ்செய்தவரையும்,இந்தவிசேஷத்தை இவ்வளவு கீர்த்தியாகக் கொண்டாடச் சிரத்தை எடுத்தவர்களையும் மெச்சிப் பேசினார். பின்பு எல்லோரும் கரகோஷம் செய்ய அக்கிராசனாதிபதிக்குமாலை போடப்பட்டது. பின்பு மகா-ள-ள-ஸ்ரீ சப்ரிஜிஸ்ட்ரார் வேம்பு ஐயர், பி. ஏ. அவர்கள் சக்கரவர்த்திக்கும் சக்கரவர்த்தினிக்கும் வாழ்த்துக்கூற ராஜவாழ்த்துப் பாட்டுப் பாடி கூட்டங்கலைந்தது. ஷை ஊரிலுள்ள கோவில் மேளவாத்தியக் கச்சேரி கூட்டம் முடியும் வரை நடந்தது.

## ஒரு சிக்கலான பிரச்னை.

### மகாத்மாவின் பதில்.

நான் விவேகியென்றும் அந்தரங்க சுத்தியுள்ளவனென்றும் நம்புகிற ஒரு மாது சில சிக்கலான கேள்விகளைக் கேட்டுவிட்டிருக்கிறார். சில புருஷர்கள் உரிமைகளையும் பாத்தியங்களையும் காப்பாற்றிக்கொள்வதில் பிரியமுடையவர்களாயிருக்கக்கூடும் என்பதை நினைக்கையில் அந்த மாதின் கேள்விகளைப்பற்றி விவாதிக்காமலிருப்பதே நலம். ஆனால் நானும்ஒரு புருஷனாயிருந்து 40 வருஷகாலம் சந்தோஷமாகக் குடும்பவாழ்வு நடத்தியவன் என்ற முறையில் அக்கேள்விக்குப் பதில் சொல்லுவதுதான் முறையென்று நினைக்கிறேன்.

முதலாவது கேள்வி:—ஒரு புருஷன் அல்லது ஸ்திரீ தேச ஊழியத்தில் சம்பந்தப்படாமல் வெறுமே ராம நாமத்தை ஜபிப்பதால் மாத்திரம் ஆத்மானுபவம் அடைந்துவிட முடியுமா? குடும்ப வேலைகளைக் கவனித்துக்கொண்டு சமயம் நேர்ந்தபோது ஏழைகளிடத்தில் அன்பு காட்டினால் போதுமென்று எனது சகோதரிகளில் சிலர் கருதுவதால் இந்தக் கேள்வியை நான் கேட்க வேண்டியதாயிற்று.

பதில்:—இந்தப் பிரச்னை ஸ்திரீகளை மாத்திரமன்றி, ஆண்மக்களிலும் பலரை வாட்டிவருகிறது. ஒன்றுமே செய்யாமலிருப்பதிலும் மனுஷ்யப் பிரயத்தனத்தில் ஒன்றுமேயில்லை யென்பதிலும் நம்பிக்கையுடைய ஒரு சாரார் இருக்கிறார்கள். ஆனால் எனக்கதில் நம்பிக்கையில்லை. என்னுடைய அபிப்பிராயத்தில் ஒரு மனிதனுடைய வளர்ச்சிக்கும் 'பிரயத்தனம்' அத்தியாவசியம. பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்யவேண்டும். நமது பிரயத்தனத்திற்குத் துணையாகவும் தெய்வத்தின் அருளை வேண்டியும் மனம் பரிசுத்தமடையவும் ராம நாமத்தை உச்சரிக்க வேண்டுமேயன்றி வெறுமே அர்த்தமில்லாமல் அதை ஜபிக்கக் கூடாது. நாம் எடுத்துக்கொண்ட காரியம் சரியான வழியில் செல்வதற்கு வழி காட்டும்படி தெய்வத்தைப் பிரார்த்திப்பதுதான் ஒழுங்கு. பிரயத்தனங்களில்லாத வெறும் ஜெபம் பிரயோஜனமில்லை. மனுஷ்ய பிரயத்தனத்தில நம்பிக்கையில்லாதவர்களுக்குக் குடும்பக் கவலையேன்? ஏழைகளிடத்தில் அன்பு காட்டவேண்டிய அவசியமென்ன? தேச ஊழியமென்றால், மனித வர்க்கத்திற்குத் தொண்டு புரிவதென்பதே என்னுடைய கருத்து. குடும்பத்துக்கு உழைப்பது எப்படி நிஷ்காம்ய கர்மமாகுமோ அதுபோலவே மனிதர்களுக்குத் தொண்டுபுரிவதுமாகும். லாபத்தை எதிர்பாராமல் குடும்பத்துக்கு உழைக்கிறவர் தேசத்தொண்டும் செய்வார். ராம நாமம் நெருக்கடியான நிலைமைகளில் நமக்கு வழிகாட்டியாயிருக்கும்;நிதானந்தவரு து.ஏழைகளுக்குத்தொண்டு புரியாமல் ஆத்மானுபவம் ஏற்படாது.

2-வது கேள்வி:—ஹிந்து மதத்தின்படி புருஷன் எவ்வளவு அயோக்கியனாயிருந்தாலும் மனைவிக்குப் பதிபக்தியிருக்கவேண்டும். புருஷனிடத்தில் ஐக்யமாகவேண்டும். புருஷனுடைய இஷ்டத்துக்கு விரோதமாக மனைவி இந்த சந்தர்ப்பத்தில் தேச ஊழியம் செய்யலாமா?

பதில்:—என்னுடைய அபிப்பிராயத்தில் சீதைதான் உத்தம மனைவி; ராமன் தான் உத்தம புருஷன். சீதை ராமனுடையாக இருக்கவில்லை. புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் அடிமையென்று சொல்லலாம். ராமன் சீதையின் வார்த்தையை அலட்சியம் செய்யவில்லை. உண்மையான அன்பு இருவருக்கும் இருந்தால், தகராறுக்கே இடமில்லை. உண்மையான காதல் இல்லாத சந்தர்ப்பங்களில் புருஷன் மனைவி என்ற சம்பந்தமே கிடையாது. தற்கால ஹிந்து சமூகத்தில் புருஷனும் மனைவியும் விவாகமாகிற காலத்துல் ஒருவரையொருவர் அறிந்திருப்பதில்லை. வாழ்வில் இருவருடைய அபிப்பிராயங்களும் மாறுபடும்போது, குடும்ப வாழ்வுக்கு அது இடையூறாயிருக்கிறது. புருஷன் தனது மனைவியை எந்த விஷயத்திலும் கலந்து கொள்வது அனுவசியமென்று கருதுகிறார்கள். அவளைத் தன்னுடைய சொத்தாக பாவிக்கிறான். மனைவி பாவம்! தன்னுடைய அபிலாஷைகளை அடக்கிக்கொண்டு, புருஷனுடைய இஷ்டத்துக்கே எல்லாவற்றையும் விட்டுவிடுகிறாள். இதிலிருந்து தப்ப ஒரு வழியுண்டு. மிராபாய் (மிஸ் ஸ்லேட்) திடமாக அதற்கு ஒரு வழி காட்டியிருக்கிறார். மனைவி தன் இஷ்டப்படி நடக்க உரிமையுண்டு. தன்னுடைய கட்சி சரியென்று பட்டபின், அதன்படி என்னவந்தாலும் நடக்கத் தைரியம் வேண்டும்.

3-வது கேள்வி:—புருஷன் மாமிசம் சாப்பிடுகிறவனாயிருந்து மனைவிக்கு அது கெடுதலென்று பட்டால் அவள் மாமிசம் சாப்பிட மறுக்கலாமா? அல்லது மனைவியும் மாமிசம் சாப்பிடத்தான் வேண்டுமா? புருஷனுக்கு மாமிசம் சமைத்து வைத்துவிட்டு தான் சாப்பிடாமல் இருக்கக்கூடாதா? புருஷனை மாமிச போஜனத்திலிருந்து தப்புவிக்க வகைதேடலாமா? புருஷனுக்கு விரோதமாக மனைவி கலகம் செய்தால் குடும்பவாழ்வு அமைதியாக எப்படி நடக்கும்?

பதில்:—புருஷனுடைய குற்றத்துக்கு மனைவி உடந்தையாயிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. புருஷனைச் சீர்திருத்தப் பிரயத்தனப்படலாம். ஒரு காரியம் பிசகென்றுபட்டால் அப்பிசகைச் செய்யாதிருக்க மனைவிக்குத் தைரியம்வேண்டும். விவாகத்துக்கு முன் புருஷன் மனைவி ஆகிய இருவரும் மாமிம் சாப்பிடுவது வழக்கமாயிருந்தால், விவாகத்துக்குப் பிறகு புருஷனுக்கு மாமிசம் சமைத்து வைக்கவேண்டியதுதான். புருஷன் மட்டும் மாம்ச போஜனம் செய்வதாயிருந்து, ஒரு மரக்கறி குடும்பத்தில் விவாகம்செய்து, மனைவியைக் கட்டாயப்படுத்துவானாகில் மனைவி சமைத்துப்போட மறுத்துவிடலாம். குடும்ப வாழ்வில் ஒரு கட்டுப்பாடு வேண்டும். நமது வாழ்வே ஒரு கடமை; நாம் உமேதவாரிகள். மனித வர்க்கத்துக்குத் தொண்டுபுரியக் கற்றுக்கொள்ளுகிறோம். தம்பதிகளில் ஒருவர் இதற்கு விரோதமாயிருந்தால் மற்றவரை அது பந்தப்படுத்தாது; பிரிந்து போய்விட வேண்டியதுதான். விவாகத்தின் லட்சியத்தைத் தனிமையாக நிறைவேற்ற முயலவேண்டியதுதான். புருஷனும் மனைவியும் அந்தஸ்தில் சமமானவர்கள்; ஆனால் இப்போதுள்ள அனுஷ்டானம் வேறாயிருக்கிறது. அது எப்பொழுது ஏற்பட்டதோ தெரியாது; ஆனால் ஹிந்து மதத்தில் அதற்கு அனுமதியில்லை. ஆத்மானுபவத்தின் நிமித்தம் புருஷனும் மனைவியும் தங்கள் உசிதப்படி நடக்க ஹிந்து மதம் பூரண அனுமதி கொடுக்கிறது.

## ஆனந்தத் துணுக்குகள்.

வக்கீல்:—அந்த தாவாப்பட்ட நிலத்திற்கும், உன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?

வாதி:— சுமார் ஒரு மைல் தூரம் இருக்கலாம்.

வக்கீல்:—சரி. அந்த நிலத்தில் ஒரு சுவர் இருக்கிறதென்று சொன்னாயே; அதற்கும் அந்த பாழுங் கிணற்றிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?

வாதி:—தாங்கள் தான் குட்டிச்சுவரானால் கோர்ட்டார் எஜமான்கள் தான் பாழுங் கிணறு.

தன் வேலைக்காரனுக்கு சாப்பாடு கொடாமல் தான் மட்டும் திருப்தியாய் சாப்பிட்டுவிட்டு குதிரை மேலேறிக் கொண்டு கையிலிருந்த வேத புஸ்தகத்தை வாசித்துக்கொண்டு எஜமான் போகும்போது வழியில் ஒருவன் 'எங்கே போகிறீர்கள்? என்றான்.

வேலைக்காரன்:— நாங்கள் மோட்சத்திற்குப் போகின்றோம்!

வழிப்போக்கன்:— ஏதப்பா! அப்படிச் சொல்லுகிறாய்!

வேலைக்காரன்:— ஆம். அப்படித்தான்; நான் உபவாசமாயிருக்கிறேன். என் எஜமான் வேதம் வாசித்து ஜெபம் செய்து கொண்டு போகிறார். ஆகையால் நாங்கள் மோட்சத்திற்குப் போகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## சந்தா நேயர்களுக்கு.

தூத்துக்குடி, கோயிற்பட்டி, கடம்பூர் முதலிய இடங்களுக்கு சந்தா வசூலிக்கவும், புதிய சந்தாச் சேர்க்கவும் நமது ஆபீஸிலிருந்து நண்பர் மாணிக்கநாடாரை அனுப்பிவைத்திருக்கிறோம். சந்தா நேயர்கள் பாக்கியை அவரிடம் ரசீது வாங்கிக்கொண்டு செலுத்தியும், புதுச் சந்தாதார்கள் சேர்த்துக்கொடுத்தும் அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

## நாடார்குலமித்திரன்

அக்ஷய (வருடம்) கார்த்திகை மீ எஉ

## தேர்தல் முழக்கம் தீர்ந்து விட்டது.

நவம்பர் மீ 8உ சென்னை சட்டசபைத் தேர்தல் முழக்கம் வெகு அமைதியோடு தீர்ந்து விட்டது. எங்கெல்லாம் அடிதடியுண்டாகுமோ, அதனால் என்ன நேருமோ வென்று அச்சப்பட்டவர்களுக்கெல்லாம் ஆனந்தமேவிட அமைதியுடன் நடை பெற்றது பற்றி நாமும் சந்தோஷமடைகிறோம். அத்தேர்தலில் தோல்வியுற்றோம்; வெற்றி பெற்றோம் என்று பேசப்படுகிறது. அப்படியானால் தோற்றவர்கள் யார்? ஜெயித்தவர்கள் யார் என்ற கேள்விகள் பிறக்கின்றன. நாமொருவரும் ஜெயிக்கவில்லை; நம்மை யாளும் இரட்டை யாட்சி கவர்ன்மெண்டு ஜெயித்து விட்டதென்றே செப்புவோம்.

ஏனென்றால் சென்னைச் சட்டசபையைப் பொறுத்தமட்டிலும் இதுவரையும் இரண்டு கட்சிகளிருந்து வந்தன. இப்போது மூன்று கட்சிக்காரர்கள் பெரும்பாலோராய் வந்திருக்கிறார்கள். ஜஸ்டிஸ் கட்சிக்கு சிறிது பேர் குறைவாயிருந்தாலும் நியமனம்செய்யப்படுவோர்கள் பெரும்பாலும் ஜஸ்டிஸ் கொள்கையுடையவராகத் தானிருக்க வேண்டும். ஆகையால் அது செத்துப்போய் விட்டதென்று சங்கூதுவோர் சரியாக உணராமலே ஊதுகிறார்கள். சென்னை ஜமீன்தார் தொகுதியை உடைத்து விட வேண்டுமென்று எதிர்த்த சர்வ பிராமணப் பணங்களும், பணக்காலால் என்று நசுங்கப்பட்டனவோ, அன்றே அக்கட்சிக்கு இன்னும் உயிர் நாடி அற்றுப் போகவில்லை யென்று அகில இந்தியா முழுதும் சப்திக்கின்றது. ஆகையால் ஒன்றும் முழுகிப்போய் விட வில்லை, உயிரிருக்கிறது. வேலை செய்யும் பலம் மீண்டும் உண்டாகலாம். ஐரோப்பா யுத்த சமயத்தில் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்தின் இரு கண்களாய் விளங்கிய மிஸ்டர் லாயிட் ஜார்ஜ், ஆஸ்க்வித்து ஆகியஇருவரில்யுத்தத்திற்குப்பின்னர்லாயிட்ஜார்ஜ்மந்திரி பதவியையிழந்தார். ஆஸ்குவித் பார்லிமெண்டு மெம்பராகக்கூட வரமுடியாமல் போனார். ஆயினும் இன்னும் அவர்கள் தேசத் தொண்டை விட்டு விலகாமல் எதிர்க் கட்சியோடு போராடிக் கொண்டு தானிருக்கிறார்கள் ஆகையால் ஸ்ரீமான்கள் தணிகாசலஞ் செட்டியார், நடேச முதலியார், ராமசாமி முதலியார், சிவஞானம் பிள்ளை, கே. வி. ரெட்டி முதலிய வீரர்கள் வீரங்குன்றியதற்குக் காரணமென்ன வென்பதை கனம் பணக்கால் ராஜா நீர யோசனை செய்து, நாட்டில் கதரை விர்த்தி செய்து, கட்குடியை ஒழித்து, மகாத்மா காந்தி நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றக் கூடிய சுகராஜ்யமாகிய சுயராஜ்யத்தை ஸ்தாபிக்கப் பாடுபடுவாராக.

எதிரொலி சப்திக்கிற மாதிரி இழந்த தம் சகாக்களுக்குப் பலங் கொடுத்து, சுயேச்சைக் கட்சியென்று சொல்லிக் கொள்பவர்களையும் துணை சேர்த்து மீண்டும் பிராமண ராஜ்யம் வந்து புகுந்து விடாமல் அரண்களைப் பலப்படுத்திப் பாதுகாப்பாராக.

சுயராஜ்யக் கட்சிக்கோ ஜஸ்டிஸ் ஆட்சி மீது தான் வெறுப்பேயன்றி உண்மையில் எந்தப் பிரிட்டீஷ் ஆட்சி மீதும் வெறுப்புக் கிடையாது. ஏனென்றால் அவ்வாட்சியில் நன்றாய்ச் சாப்பிட்டவர்கள்; சாப்பிடுகிறவர்கள்; உப்பிட்டவர்களை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். ஒத்துழையாமை ஓங்கி வளரும்போது உள்ளேயிருந்து கொண்டு அவ்வேருக்கு வெந்நீர் வார்த்தவர்கள். மகாத்மா காந்தியை ஜெயிலில் போட்டு விட்டு காங்கிரஸை உடைத்து தங்கள் வழிக்கிழுத்துக் கொண்டவர்கள். அவர்களுடைய அந்தரங்கமெல்லாம் உத்தியோகம் ஏற்றுக் கொள்தலேயாம். பண வூக்கத்தாலும், விடாமுயற்சியாலும், வாக்கு வன்மையினாலும் ஜனங்களை மயக்கி அவர்கள் கூட்டம் சற்று விரிவடைந்திருக்கிறது. அடைந்த வுடனே அதன் உண்மைச் சொரூபம் சிறிது தெரிய வருகிறது. ஸ்ரீமான் ஜார்ஜ்ஜோஸப் சொல்லிவிட்டார்; திவான்பகதூர் ரங்காச்சாரியார் செப்பி விட்டார் என்று உத்தியோக வேட்டைக்கு வலை வீசுகிறது. அக்கட்சிப் பத்திரிகைகளும் ஒத்து மத்தளத்தைத் தத்தித்திங்கிணத்தோ மென்றடிக்க ஆரம்பித்திருக்கிறது. லார்டு கோஷன் சத்திய மூர்த்தியை அழைக்க மாட்டாரா? அல்லது அஸ்ஸாம் காங்கிரஸ் வரையும் யாரையும் அழையாமலிருக்க மாட்டாரா வென்று கருதப்படுகிறது. காங்கிரஸ் ஆணை அதற்கு ஒரு பெரிய சனியனாகவுந் தோன்றலாம். சட்டசபைக்குட் புகவேண்டிய காங்கிரஸை வசப்படுத்திக் கொண்டது போல் இனி உத்தியோகம் ஏற்றுக் கொள்வதைப் பற்றிய சூட்சிகள் தான் அஸ்ஸாமில் அதிகமாய் நடக்கும்.

சுயேச்சைக் கட்சி யென்பதோ, ஆறு வருஷங்களாக ஜஸ்டிஸ் கட்சிக்குள்ளிருந்து எதாவது ஒரு உத்தியோகத் துண்டு கிடைக்காதா வென்று எதிர் பார்த்து இலவு காத்த கிளிபோல் ஏமாந்து பிரிந்தவர்களும், சுயராஜ்யக் கட்சி யென்றால் அதிகாரிகளுக்குப் பிரியமாகக் காணுதென்று அதை யொட்ட அச்சமுற்றவர்களுமேயன்றி உத்தியோகத் துறவிகளென்றுவது மேற் சொன்ன இருவர்களைப்பார்க்கிலும் விசேஷமாகத் தேசத்துக்கு ஒன்றைச் செய்து விடுவார்களென்றுவது சொல்லமுடியாதென்று சொல்லப்படுகிறது. இவர்கள் மதில் மேற் பூனையாயிருந்து முடிவில் வலுத்த பக்கத்திலிறங்கி விடுவார்களென்பதை மறைக்க முடியாது.

ஸ்ரீமான் மார்த்தாண்டம்பிள்ளை முதலிய சில பேர் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து அதன் கொள்கை பிடியாமற் பிரிந்து ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளைக் கண்டித்தெழுதியிருக்கிறார்களே யென்றால், ஸர். சிவஞானம் பதவி ஸ்ரீமான் மார்த்தாண்டத்துக்குக் கிடைத்திருந்தால் அவர் பிரியவுமாட்டார்; பேசவும் மாட்டார். உண்மையில் அக்கொள்கை அவருக்குப் பிடியாமலிருந்தால் ஸர். சிவஞானம் தேர்தலில் ஜெயிக்க வேண்டுமென்று வேலை செய்திருக்கவு மாட்டார்.

முக்கியமான மூன்று கட்சிகளின் தன்மை இவ்வாறிருப்பதால், அதனதன் வெற்றி அதனதன்றென்று அவர் கருதலாம்; தேசத்திற்கு வெற்றி யென்று சொல்ல முடியாது. இது கவர்ன்மெண்டுக்கே வெற்றியென்று "நவசக்தி" கூறுவதை நாம் ஆதரிக்கிறோம். இம் மூன்று கட்சியும் கதர், தீண்டாமை, மதுவிலக்கு ஆகிய மகாத்மா காந்தி நிர்மாணத்திட்டங்களை சட்டசபையிலிருந்து கொண்டாவது உண்மையில் நிறைவேற்றி வைக்குமா? நிறைவேற்ற வேண்டுமென்றுவது நினைக்குமா? ஒரு கட்சி பேச்சளவில் நிற்கும். மற்றிரு கட்சிகளுக்கும் அதுவேனு முண்டென்று சொல்ல முடியாது. ஆகையால் இந்தக் கவர்ன்மெண்டில் எந்தக் கட்சியும் இருந்து எதிர்பார்க்கும் பலனை அடைந்து விட முடியாதென்பது அநுபவத்தில் அறிந்திருக்கிறோம். ஆயினும் அதை விட வேறு நயமில்லை யென்ற நம்பிக்கை போய் விடவில்லை. அதனாலே முதிர் சுளை ஈப்போல் யாவரும் மொய்க்கு கின்றனர். மூவரும் யாது செய்வதென்பதை முப்பதாந் தேதி முடிவறிந்து எழுதுவோம்.

## குறிப்புகள்.

### கூடக்கோவில்.

இவ்வூரில் நாடார்களுக்கும் மறவர்களுக்குமநடந்த கலகக்கேஸில்மதுரையில் மறவர்கள் தண்டிக்கப்பட்டு ஹைகோர்ட்டு அப்பீலிலும் ஒருவாறு தண்டனை உறுதிசெய்யப்பட்ட விபரம் சென்ற வாரப்பிரசுரத்தில் பார்த்திருக்கலாம்.

இக்கேஸ் சுமார் இரண்டரை வருஷங்களாக நடந்து வந்திருக்கிறது. நாடார்கள் தங்களை கலகம் நடத்தியவர்களை தண்டிக்கவேண்டி சுமார் 20000 ரூபாய் செலவு செய்திருக்கலாம். கலகம் செய்தவர்களும் தாங்கள் செய்த குற்றத்தினின்றும் விடுவிக்க 20000 ரூபாய்க்கு மேற்றான் செலவுசெய்திருக்கவேண்டும். கலகம் செய்தவர்களும் செய்யப்பட்டவர்களும் சாமான்யமாய் நியாயம் கண்டுபிடிக்க முடியாதென்று இந்தக்காலச் சோதிடம் சொல்லியும் அனுவசியமாய் அக்கிரமங்கள் செய்வதும் அதிகாரத்தேவதைகட்கும் வக்கீல் கட்கும் பணாபிஷேகம் செய்வதும் அதனால் வறுமை நோய் கொண்டலைவதும் எவ்வளவு மதியீனமென்பதை இனியேனுமுணர வேண்டும்.

அநியாயமாய் கலகம் செய்பவர்களும் செய்யப்படுபவர்களும் பலவகையில் கஷ்டப்படுகிறார்கள். பிரிட்டீஷ் அரசாங்கம் விழிப்புடனிருந்துவரும் போதும், சுயராஜ்யம வந்தால் சர்வ துன்பங்களும் தொலைந்து போமென்று கதறிக்கொண்டிருக்கும் போதும் இவ்விதக் கொடுமைகள் நடப்பதைத் தடுக்க யாரும் முயற்சிசெய்வதுமில்லை. மறவ மகாஜனங்களின் தலைவர்களாவது, இத்தீய காரியங்களைத் தவிர்க்க முயற்சி செய்தாலென்ன? அடிப்படையான தவறுகளை நீக்க அவர்கள் பிரயாசைப்படாமல் குற்றப் பரம்பரையினர் என்ற சொல்லை மாற்ற எப்படி முடியும்? தமிழ்நாட்டில் ஜனப்பெருக்குள்ள மறவர் நாடார் இரு சமூகத்தவர்களும் சகோதரத்வமாக எப்போதும் வாழ்ந்தால் தேசத்திற்கே வெகு இனிமையாயிருக்கும். ஆகையால் மறவ மகாஜனத்தலைவர்கள் தங்கள் கடமையைச்செய்தல் சாலவும் நன்றே.

### நீந்துந்திறமை.

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையில் 10 மைல் தூரமுள்ள கடலை பல ஆடவ ஸ்திரீகள் நீந்திக்கடந்து பெருமைபெற்றிருக்கிறார்கள். இதொரதிசயமில்லையென்று காட்டுவதற்கேற்ப, பம்பாயில்இரண்டு பார்ஸி வாலிபர்கள் பம்பாய் துறைமுகத்தின் கிழக்குப்பாகத்தில் அப்பாலோ பந்தரிலிருந்து 12 மைல்த் தூரத்தின் கடலை 5 மணி 50 நிமிஷ நேரத்தில் நீந்தி வெற்றிபெற்றிருக்கிறார்கள். இருவரும் ஒரே முறையில் நீந்தினார்களாம்; இடையில் மூன்று முறைஆரஞ்சுப் பழரசம் சாப்பிட்டிருக்கிறார்கள்.

### மாறுவேடத்தில் மணம்.

பெல்ஜியம் இளவரசர் லியோபால்டு இராஜ குமாரியின் நட்பைப் பெற்று அவளை மணப்பதற்காக மாறுவேடம் பூண்டு மாமனார் அரண்மனையில் வசித்துவந்தார். நவம்பர் 4உ பிரஸ்ஸல்ஸ் நகரத்தில் விவாகம் நடைபெறுமாம். பலர் ஆகாயக்கப்பலில் ஏறி ஆகாயத்திலேயே குருக்களை வைத்து மண முடிக்கின்றார்களாம். மேல்நாட்டு நாகரீகம் இன்னும் எதை யெல்லாம் வெளிப்படுத்துகிற தென்று பார்ப்போம்.

### நான் நமுறை உயிர்தப்பினர்.

இத்தாலி தேசத்தின் சர்வாதிகாரி மிஸ்டர் முஸோலினியை பதினைந்து வயதுள்ள ஒரு சிறுவன் துப்பாக்கியால் சுட்டான். குண்டு குறிதவறி மற்றொருவர் மேற் பாய்ந்து சிறிது காயமுண்டுபண்ணிவிட்டது. சுட்ட சிறுவனை ஜனங்கள் பிடித்தவுடனே அடித்துக் கொன்றுவிட்டார்களாம். இதற்குமுன் மூன்று முறை தப்பியிருக்கிறார். இனி அவரை அசைக்க முடியாதென்றும் அவரை ஆண்டவன் எப்போதும் பாதுகாப்பாரென்றும் ஜனங்கள் கருதுகின்றார்களாம். ஜனசமூக மேன்மையை நாடும் தலைவரை சாதாரண ஜனங்கள் என் கொல்ல நினைக்கின்றார்கள்? அவருடைய செய்கையும் கொள்கையும் தவறுதலா அல்லது (கொலைசெய்யும்) ஜனங்களுடைய மனப்பான்மைதான் தவறுதலா வென்று சிந்திப்பாரில்லையா?

### சமாதானம்.

நாடார் மகாஜனசங்கம் ஏழைமாணவர்கள் சகாய நிதி லாட்டரிப்பிரைஸ் சாபிதாகிடைக்கவில்லையென்றும் பணம் வந்து சேரவில்லையென்றும் நமக்குப் பலர் கடிதம் எழுதுகிறார்கள். ஒருவரேனும் குபார்சொல்லக் கூடாத நிலைமையிலே இதுவரையும் லாட்டரிச் சீட்டு கமிட்டியார் பிரைஸைஒழுங்காக நடத்தியும், பின்னர் இரண்டுபுஸ்தகம் விற்றவர்களுக்கெல்லாம் லிஸ்டுஅனுப்பியும்,5ரூபாய்க்குமேற்பட்டுத் தபால்மூலமாக அனுப்பவேண்டிய பணங்களை அனுப்பியுமிருக்கின்றனர். இரண்டு ரூபாய்க்காரர்களுக்கும் கூடிய சீக்கிரம் அனுப்பிவிடுவார்கள். லிஸ்டு கிடைக்காதவர்கள் எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்; அனுப்பத்தவறியிருக்கலாம்; அனுப்பியும் தவறியிருக்கலாம். ஆகையால் சகல விபரங்களுக்கும் லாட்டரிக் கமிட்டிக்கு எழுதி மனச் சமாதானமடைந்து கொள்வார்களாக. லாட்டரிக் கமிட்டியாரும் ஆவலோடும், அபிமானத்தோடும் சீட்டு விற்றனுப்பிய புள்ளிகளுடைய விருப்பத்திற்குச் சிறிதும் தளர்வின்றி சமாதானமளித்து வருவார்களென்று நம்புகிறோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



## ஜெயம்! ஜெயம்!! ஜெயம்!!!

### இருவரிலொருவர் வெற்றி பெற்றார்.

திருநெல்வேலி ஜில்லாவின் கிராமாந்தரத் தொகுதிக்கும், கிறிஸ்தவ தொகுதிக்கும் அபேக்ஷகர்களாய் நின்ற இரண்டு நாடார்களில், கிறிஸ்தவப் பிரதிநிதியாக நின்ற ஸ்ரீமான் டானியல் தாமஸ் நாடாரவர்கள் அதிகமான வாக்கைப்பெற்று ஜெயித்து விட்டார் என்று தந்தி மூலம் அறிந்து சந்தோஷிக்கின்றோம். இவருக்குப் போட்டியாய் நின்ற தஞ்சை ஜில்லா மிஸ்டர் பன்னீர்ச் செல்வ உடையாரை நாம் முன்னர் கூறியவாறு அந்நிய ஜில்லாக்காரர் என்று சொல்லி யனுப்பி விட்ட வாக்குமுள்ள ஓட்டர்களை மிகவும் பாராட்டுகின்றோம். கிறிஸ்தவ சமூகத்துக்கும், நமது தேசத்துக்கும் செய்ய வேண்டிய கடமையை நமது டானியல்தாமஸ் அவர்கள் நன்கு செய்வார்களென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அவருடைய அபார சக்தியினால் சட்டசபையிலும் யாவராலும் போற்றப் பெறுவார். ஆண்டவன் அவருக்கு சர்வ சக்திகளையும் கொடுத்தருள்புரிவாராக.

ஸ்ரீமான் அரி. அ. சு. துரைச்சாமி நாடாரவர்கள் ஏன் ஜெயிக்கவில்லையென்பதைப்பற்றி மறுமுறை எழுதுவோம்.

### நன்கொடை.

நமது மித்திரன் அபிவிருத்திக்காக திருநெல்வேலி, ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடாரவர்கள் எம் வேண்டுகோளுக்கிணங்கி அன்புடன் ஐம்பது ரூபாய் நன்கொடை செய்திருப்பதை மிகுந்த வந்தனத்துடன் பெற்று மகிழ்வெய்துகின்றோம். இப்பெரும் நன்கொடை வள்ளலார் நம் மித்திரனின் மூன்றும் பிராயத்தில் போஷிப்பிற்காக ஐம்பது ரூபாய் கொடுத்துதவி செய்திருக்கிறார்கள். நமது மித்திரன் போஷகப்பிரபுக்கள் பக்தியில் போற்றிவைத்திருக்கிறோம். மித்திரன் சரித்திரம் எழுதப்படும்போது இப்பேரானர் சரித்திரம் பெரிதும் போற்றுதலாய்க் காணப்பெறும்.

இராம நாமத்தை யுச்சரிக்குந் தோறும், ராவண நாமமுந் தொடர்ந்து வருவதுபோல, இக்கொடை வள்ளலார்கள் பிரஸ்தாபம் வரும்போதெல்லாம் தருவதாய் வாக்களித்து விட்டு, பல தடவை அலையவைத்து, காலையுமொடித்து, எம் பணத்தையும் செலவிட்டு பிரயோசனமின்றி விருதா வாக்கிய கர்ணதாரர்கள் ஞாபகமும் வந்து கொண்டிருக்கிறது. நாளை யென்று சொல்லி கர்த்தவனைப் பார்க்கிலும், இல்லை யென்று சொல்வது நன்று.

### சந்தோஷச் செய்தி.

நமது மித்திரன் க்ஷேம நிதி தர்மப் பண்டு லாட்டரிச் சீட்டுப் புஸ்தகம் பெற்றவர்களில் பெரும்பாலோர் சீக்கிரம் விற்றனுப்புவதாகப் பதில் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களும் அவ்வாறே பதில் எழுதி உற்சாகமூட்டி உதவி செய்வார்களென்று நம்புகின்றோம். எல்லாருடைய அன்பான பதிலறிய மிகுந்த ஆவலுடனிருக்கிறோம். ஆயினும் அடுத்த வாரத்தில் நமது சகாக்களுடன் புறப்பட்டு பற்பல விடங்களுக்குச் சுற்றுப்பிரயாணம் செய்வதாகவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். எல்லோரும் மித்திரன் பாலன்புகூர்ந்து அதிகமான சீட்டுகளைப் பெற்று வேண்டிய ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

### யாருக்குக் கிடைக்குமோ!

சென்னை சட்டசபைக்கு நாடார்களின் பிரதிநிதியாக ஒருவரைக் கவர்ன்மெண்டார் நியமனம் செய்வது வழக்கமன்றோ. அந்த ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் சுப்பிரமணிய நாடார் பி. ஏ. பி. எல். ஹைக்கோர்ட்டு வக்கீல் அவர்களை நியமிக்குமாறு அஜ்ஜில்லா நாடார் பிரமுகர்கள் தந்தி மூலம் கவர்னருக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள்.

நாடார் மகாஜன சங்கத்திலிருந்தும், மற்றும் பல நாடார் பொது ஸ்தாபனங்களிலிருந்தும் பொதுவாக பெயர் குறிப்பிடாமல் தங்கள் சமூகத்திற்கு

## சென்னை சட்டசபைக்கு நாடார்குலப் பிரதிநிதி

(திருமேனி நாதன்)

சென்னை சட்ட சபையில் நாடார் குலப் பிரதிநிதிகளாகச் சென்ற இரண்டு தடவைகளிலும் வீற்றிருந்தவர்களான ஸ்ரீமான்கள் சௌந்தரபாண்டிய நாடாரவர்களும், சிவகாசி பி. கே. எஸ். ஏ. ஆறுமுகச்சாமி நாடாரவர்களும் கவர்ன்மெண்டாரால் நியமனம் பெற்றவர்கள். இவ்விரு கனவான்களும் சிறந்த குலாபிமானிகள் என்பதை யாம் ஈண்டு விரித்து எழுதத் தேவையில்லை. இவர்கள் தங்கள் குலப் பிரதிநிதிக் கடமையை சட்டசபை அங்கத்தினர் காலாவதிக்குள்ளும், அதற்குப் பின்னும் நிறைவேற்றிவருகிறார்கள். சட்டசபைக்குள்ளும், வெளியிலும் குலாபிமானத்துடன் தங்களாலியன்றளவு குல நலம் கருதி உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம் குலத்தவர்களால் ஆங்காங்கு நடத்தப்பட்ட ஜாதீய மகாநாட்டிற்கெல்லாம் பெரும்பாலும் இவ்விரு கனவான்களே தலைமை வகித்து தங்கள் கடனாற்றி வருகிறார்கள். அவர்கள் நாடார்குலப் பிரதிநிதியாகச் சென்ற இரண்டு தடவைகளிலும் ஒருவர் பின் ஒருவராக கவர்ன்மெண்டாராலே நியமிக்கப்பட்டாலும், இவர்களுடைய குண விசேடத்தாலும், குலாபிமான உழைப்பாலும், நாடார் மகாஜனங்களும், அவர்களின் பிரதம சங்கமாகிய நாடார் மகாஜன சங்கமும், இவர்களை தங்கள் குலப்பிரதிநிதியென ஒப்புக் கொள்ளத் தயங்கவில்லை.

இதுவரை இவ்வாறு நடந்து வந்தது சரியேயாயினும் இனி நாம் அத்தியாவசியமாகக் கவனிக்க வேண்டிய தொன்றுளது. நாடார்களுக்கென இதுவரையும் கவர்ன்மெண்டார் மனமுவந்து ஒரு ஸ்தானம் ஒதுக்கி வைத்துக் கொண்டு வருவதற்கு நாம் மகா சந்தோஷத்துடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் கவர்ன்மெண்டார் நாடார்களுக்கு ஒரு பிரதிநிதி ஸ்தானம் ஒதுக்கி வைத்திருக்க கருணைகூர்ந்திருப்பதுபோல, அந்த ஸ்தானத்திற்கு ஒரு நாடாரை நியமிக்கும் அதிகாரத்தையும், நாடார் மகாஜனங்களிடத்திலே விட்டு அவர்களாலேயே தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதியையே ஏற்றுக் கொள்ள வேண்டும். கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டு நாடார் மகாஜனங்களால் ஒப்புக் கொள்ளப்படுவதைக் காட்டிலும் நாடார் மகாஜனங்களால் தங்கள் குலப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க விட்டு, அவர்கள் அனுப்பும் பிரதிநிதியைக் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுவது தான் நியாயமும் சிறந்ததுமாகும்.

ஒரு ஜாதியாருக்குப் பிரதிநிதியாகச் சட்டசபையில் வீற்றிருக்கக் கூடியவரை அச்சாதியாரே தான் தெரிந்தெடுக்க வேண்டும். தங்களுக்கு பிரதியாகும் ஒருவரின் யோக்கியதை, குணம், மனம், அபிமானம், தியாகம், உழைப்பு, பொறுப்பு முதலியவைகளை அந்த சாதியாராலேதான் கவனித்துத் தெரிந்தெடுபடமுடியும், ஆகையால் நாடார் மகாஜனங்களுக்குப் பிரதிநிதியாய் விளங்கும் நாடார் மகாஜன சங்கம் இது விஷயத்தில் சிரத்தை செலுத்த வேண்டும். இது காறும் இவ்விஷயமாய் நம் மகாஜன சங்கம் கவனம் செலுத்த வில்லை யென்றே நாம் நினைக்க வேண்டியதிருக்கிறது. இனியாகிலும் மகாஜன சங்க நிர்வாகிகள் வரப்போகிற சீர்திருத்தத்தின் போது கவனம் செலுத்தி இவ்வசதியை ஏற்படுத்தக்

இரண்டு ஸ்தானங்கள் வேண்டுமென்று தந்தி மூலம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எப்படியும் ஒரு ஸ்தானம் தப்பாமற் கிடைக்கும்; அது யாருக்குக் கிடைக்குமோ. யார் யார் அது கிடைக்க வேண்டுமென்று பெரிய தேவதைகளுக்கு பொங்கல் பூஜை, நெய்வேத்தியம் புரிந்து கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

## மதுரை.

### சென்னை சட்டசபை எலெக்ஷன்.

(நமது நிருபரிடமிருந்து)

11—11—26.

சென்னை சட்டசபையின் அங்கத்தினர் பதவிக்காக, மதுரை நகரத் தொகுதிக்கு ஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்களும், முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடு அவர்களும் அபேக்ஷகர்களாக நின்றார்கள். ஷை நாயுடு அவர்களும் அநேக முனிஸிபல் கவுன்சிலர்களும், ஸ்ரீமான் கா. ம. அலாவுதீன் ராவுத்தர் அவர்களும் கங்கணம் கட்டி வேலை செய்தார்கள். போட்டி மிகவும் பலமாக இருந்தது. ஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்களுக்காக சகல சௌராஷ்ட்ரா வகுப்பினரும், காங்கிரஸ் மஹாஜன சபையும் விசேஷ முயற்சியுடன் வேலை செய்தார்கள். அதோடு நாடார் ஊழியப்பிரசுரசபை பிரஸிடெண்ட் ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்களும், ஷை சபையின் இருகாரியதரிஸிகளும், ஏ. கே. முத்துக்குமாரு நாடார், ஏ. கே. ஆறுமுக நாடார், ஆ. கு. அ. இ. அண்ணாமலை நாடார், தக்ஷிணாமூர்த்தி நாடார் அவர்களும் முன் வந்து ஒருவாரமாக ஓட்டர்களிடம் நேரில் சென்றும், பல விசேஷ துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் விசேஷ பிரசாரம் செய்து வந்தனர். எலெக்ஷன் தினத்தன்று மோட்டார்களும், ஜட்கா, பீட்டன்களும் நகரின் எல்லா தெருக்களிலும் வாய்வு வேகமாக பறந்து கொண்டிருந்தன. மாலை 6-மணிவரை ஓட்டுகள் பதிவு செய்யப்பட்டன. கலவரமேதுவும் ஏற்படவிடாதபடி எல்லா முக்கியவிடங்களிலும் தகுந்த பந்தோபஸ்துகள் செய்யப்பட்டிருந்தன. 11—11—26ல் மதுரை கலெக்டர் ஆபீசில் பெட்டி உடைத்து ஓட்டுகள் எண்ணப்பட்டன. ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடு அவர்களுக்கு 3528 ஓட்டுகளும், ஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்களுக்கு 4413 ஓட்டுகளும் கிடைத்து, அதிகமாக 885 ஓட்டுகள் கிடைத்தஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்கள் சென்னை சட்டசபையின் அங்கத்தினராக தெரிந்தெடுக்கப்

கொள்ளுவார்களென்று நம்புகிறோம். நாடார் குலப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை மகாஜன சங்கம் கவர்ந்து கொள்ளாதவரையில் அது நாடார் மகாஜனங்களின் பிரதிநிதி ஸ்தானம் என்ற கௌரவமும் குறைந்து கொண்டே வந்துவிடும். மேலும் கவர்ன்மெண்டாராலே நியமிக்கப்படும் அந்த அங்கத்தினரும், நம் மகாஜன சங்கத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்ற நியாயமில்லாமலும் போய்விடும். நியமிக்கும் பொறுப்பு நம் மகாஜன சங்கத்திலே யிருக்குமானால் எல்லோருக்கும் சங்கத்தினிடத்தில்விசுவாசமும், விசேஷஅபிமானமுமுண்டாகும்.

சட்டசபையில் நம் குலப் பிரதிநிதி பதவியை அடைய தற்சமயம் நான்கு நாடார்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் அறிகிறோம். ஒவ்வொருவரும் "நான் தான் நாடார்களிடத்தில் செல்வாக்குள்ளவர்" என்று பணச்செலவிட்டுக்கொண்டும், தனித்தனியே கவர்ன்மெண்டாருக்கு விண்ணப்பித்துக் கொண்டுமிருக்கலாம். நியமன அதிகாரம் நமது சங்கத்துக்கு இருக்குமேல் இவ்வகையான செலவும் சிரமமும் இராது. நாடார்மகாஜன சங்கத்தின்சன்னத்தில்லாமல் சென்னை சட்டசபையில் வீற்றிருக்க முடியாதென்ற எண்ணமும் அவர்களுக்கிருக்கக்கூடும்.

ஆகவே நாடார் மகாஜன சங்க நிர்வாகிகளே! நாட்டுக்கோட்டை நகரத்தார் தங்கள் குலப் பிரதிநிதியை நியமித்துக் கொள்ள பிரத்தியேக உரிமை பெற்றிருப்பது போல் நாம் அடையாவிட்டால் நம் சங்கத்தின் நிர்மாண பிரசாரத்தை பல வகையிலும் பாதிக்குமென்பதை ஞாபக மூட்டுகிறோம்.

## திருநெல்வேலி ஜில்லா வித்தியா சபை.

4—10—26—ல் கூடிய ஷை சபை, தூத்துக்குடி காரப்பேட்டை நாடார் பெண் பாடசாலைக்கு 5-வது வகுப்புக்கு அங்கீகாரம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறது.

* * *

அதே கூட்டத்தில் கோயில்பட்டி ரேஞ்சு நாட்டுநாயக்கன்பட்டி இந்து நாடார் எலிமெண்டரி பாடசாலையில் 5-வது வகுப்பு வைக்க அங்கீகாரம் கொடுக்க சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

### போலீஸ் வெகுமானங்கள்.

ஊத்துமலைக் கேஸ் விஷயமாய் நல்ல வேலை செய்ததற்காக குருமன்பேரி வெள்ளைய நாடார் மகன் செல்வநாயக நாடாருக்கு ரூ 5-ம், அரிய பாண்டிய நாடார் மகன் குருமால் நாடாருக்கு ரூ 3-ம், சுடலைமாட நாடார் மகன் குத்தாலிங்க நாடாருக்கு ரூ 3-ம், திருநெல்வேலி ஜில்லா சுப்பிரண்டெண்டெண்டு துரையவர்களால் வெகுமானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

* * *

புளியங்குடி கேஸ்விஷயமாக செய்த வேலையை பாராட்டி திருமலைநாயக்கன் புதுக்குடி சுப்பைய நாடார் மகன் அய்யம்பெருமாள் நாடாருக்கு ரூ 2 கொடுக்கப்பட்டிருக்கிறது.

* * *

திருநெல்வேலி சால்ட் சப் இன்ஸ்பெக்டரவர்களால் போலீஸ் கான்ஸ்டபிள் 114 நீர் வேலாயுத நாடாருக்கு ரூபாய் ஒன்று இனாமளிக்கப்பட்டது.

பெற்றார். உடனே கலெக்டர் ஆபீஸிலிருந்து காரில் ஏறி மேளவாத்தியங்களுடன் நகரின் முக்கிய தெருத்தோறும் ஊர்வலமாக வந்தார்கள். ஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்களுக்கு ஜே! என்ற மங்கள கோஷங்கள் வானம்பிளவுபடும்படி கோஷித்தன. ஜனங்கள் ஆயிரக்கணக்கான ரோஜாப் பூ மாலைகளை அளவிடமுடியாத சந்தோஷத்திற்கறிகுறியாக சூட்டி தெருத்தோறும் கௌரவப்படுத்தினார்கள். கீழமாசி வீதி வழியாக ஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்கள் கால்நடையாக நடந்து சென்ற காக்ஷி மிகவும் மாக்ஷியாக இருந்தது. பதினாயிரத்திற்கதிகமான ஜனங்கள் ஊர்வலத்தை பின் தொடர்ந்து சென்றனர். ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடார் அவர்கள் கீழவாசலில் ரோஜாப் பூமாலையும், கதர் மாலையும் சூட்டினர். நாடார் ஊழியப்பிரசுரசபையின் சார்பாக நாடார் பிரஸ் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீமான் கே. முத்துக்குமாரு நாடார் அவர்களால் ரோஜாப்பூ மாலை போட்டு கௌரவிக்கப்பெற்றார். அதை மிகுந்த சந்தோஷத்துடன் ஏற்று, ஊழியப்பிரசுரசபையின் ஊழியத்தைப் புகழ்ந்து, தகுந்த பதில் அளித்தார்கள். அப்பால் ஊர்வலம் சுவாமி சன்னதி வழியாகச் சென்று, இரவு 10-மணிக்கு தமது வீடுபோய்ச் சேர்ந்தார். 14-வது வார்டில், ஸ்ரீமான் எல். கே. துளஸிராம் அவர்களுக்கு, நாயுடு அவர்களைக் காட்டிலும் 21 ஓட்டுகள் அதிகமாக கிடைத்திருப்பது மிகவும் ஆச்சரியமான சம்பவமாகும். இதனால் 14-வது வார்டில் உள்ள ஜனங்களுக்கு ஸ்ரீமான் துளஸிராம் அவர்கள் பேரில் எவ்வளவு தூரம் உண்மையான அபிமானம் இருக்கிறதென்பதையும், அந்தரங்க சுத்தியுடன் ஓட் கொடுத்திருப்பதையும் தெளிவாக நிரூபித்துக் காட்டிவிட்டது. எல்லாம் வல்ல கடவுள் நாடார் ஊழியப்பிரசுர சபைக்கு விசேஷ ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுத்து முன்னேற்ற மடையச் செய்வாராக.

சத்தியமே ஜெயம்!

# ஆமை.

'ஆமை புகுந்தவீடும் அமீனா நுழைந்த வீடும் உருப்படாது' என்பது தமிழ் நாட்டில் வழங்கும் ஒரு புதுமொழி. அரசாட்சியாரால் அதிகாரம் பெற்று சொத்துக்களை ஜப்திசெய்யும்படி வருகிற ஒரு அமீனா ஒரு வீட்டில் புகுந்தால் அதனால் உண்டாகும் கஷ்ட நஷ்டங்கள் எவ்வளவென்று யாவருக்கும் தெரியும். நாலு குறுகிய காலும் ஒருசிறு தலையும் ஓடுமூடியஉடலுமுள்ள புத்தியற்ற ஜீவஜெந்துவாகிய ஆமை நுழைந்தால் கெடுதிவருவது எப்படி என்று நமக்கு விளங்கவில்லை. நுழைந்த வீடெல்லாம் குட்டிச்சுவரும் மட்ட மாளிகையுமாக்கும் பிறிதொரு ஆமையிருக்கிறது. அதென்ன தெரியுமா?

ஆமையைத்தேடி ஆமையைப்பிடித்து ஆமையைத்தின்னும் ஆமைக்குத் திபே! எல்லா ஆமையிலும் பொல்லா ஆமையெது? அது குளத்தாமையுமல்ல; கிணற்றாமையுமல்ல; ஆற்றாமை ஐயா! ஆற்றாமை.

ஆற்றிலே பிறந்து ஆற்றிலே வளர்ந்து ஆற்றிலேவாழும் ஆற்றுமீனே! எல்லா ஆற்றிலும் பொல்லா ஆறு எது? வெட்டாறுமல்ல; வெண்ணாறுமல்ல; அழுக்காறு துரையே! அழுக்காறு.

பூவிலேபிறந்து பூவிலேவளர்ந்து பூவிலே வசிக்கும் நாகமே! எல்லாப்பூவிலும் பொல்லாப்பூவென்ன? கொட்டைப்பூவுமல்ல; கொடிப்பூவுமல்ல; எரிப்பு ஐயா! எரிப்பு.

ஆற்றாமை என்றாலும் அழுக்காறு என்றாலும் எரிப்பு என்றாலும் வழக்கத்திலே பொறாமை என்ற தூர்க்குணத்தையே குறிக்கும் என்பது யாவருக்கும் தெரிந்ததே. நமது தேசத்தாருக்குள் பொறாமையியல்பு ஒருவன் மேல் ஒருவன் பொறாமை கொண்டதனால்தான் ஒப்புரவாய் வாழாமல் தேசத்தை அந்நியருக்குக் கொடுத்துவிட்டு அக்கடாஎன்று உட்கார நேரிட்டது.

ஒருவன் கீர்த்திவர்த்தனனான்; ஒருவன் ஆஸ்திவர்த்தனனான்; ஒருவன் சீமானானான்; ஒருவன் பூமானானான்; ஒருவன் வல்லவனானான்; ஒருவன் நல்லவனானான்; இன்னார் வீட்டில் விவாகம் வந்தது; இன்னானுக்கு யோகம்வந்தது என்று கேள்வியானவுடனே பொறாமை குடிகொண்ட புல்லன் என்ன செய்கிறான்? தன் பெண்டாட்டி தாலிக்கு திண்டாட்டம் வந்துவிட்டது போலத் தடுமாற்றமடைந்து நெடுமூச்செறிந்து அங்கமதுடைந்து சங்கடம் நிறைந்து யோசனைமிகுந்து நாசியைப்பிடித்து வீட்டார் பார்க்க வேர்வை வேர்க்கக்கண்ணைச் சுழற்றிக் கைவிரல்முறித்து முக்காடிட்டு மூலையிலிருந்து எண்ணாததெல்லாம் எண்ணத்துவங்குகிறான். படுபாவி மகனுக்கு பாக்கியம் வந்ததோ! உப்புக்காரி மகனுக்கு உத்தியோகம் வந்ததோ! பிச்சைக்காரி மகனுக்கு பெருங்கீர்த்தி வந்ததோ! ஐயோ! என் வயிறு எரிகிறதே; இன்று அதைக்கெடுக்கு முன்னே தூங்கமாட்டேன்; அவனைக் கலங்கடிக்கு முன் கண்ணுறங்கேன் என்று சொல்லிச் சர்ப்பனைபுனைந்து சதியோசனைகளைச் செய்கிறான். தன் வேலையெல்லாம் மறக்கிறான். அகத்தழகும் போகிறது; முகத்தழகும் போகிறது. ஆற்றாமைக்காரனுக்கு அமைதியேயில்லை. ஆனால் இன்னார் வீட்டிலே களவுபோனது; வாழ்வுபோனது; தாழ்வுவந்தது; இன்னான் நற்கீர்த்திபோனது; தூர்க்கீர்த்திவந்தது என்று கேள்வியானவுடனே பொறாமைக்காரப்புலைஞர்கள் தாண்டிக் குதித்து தலைகுலுங்க ஒரு சந்தோஷக் கும்மியடிப்பார்கள். வீடுவீடாய் நுழைந்து மங்காத்தான் வாயில் மண்விழுந்தது; உலகநாதன் மகனுக்கு உத்தியோகம்போயிற்று; பிரகாசத்து பேரனுக்கு பேராசம்வந்தது என்று சொல்லிக்கொண்டு திரிவார்கள்.

பொறாமைக்காரன் தன் பங்காளி பாகக்காரன், தாயாதி, சத்துராதிகள் பேரில் மாத்திரம் பொறாமைப் படுகிறதாக எண்ண வேண்டாம். தன் ஜாதி ஜன மல்லாதவனும், உற்றார் உறவோரைச் சேராதவனும், சில வேளை கண்ணால் கண்டிராதவனுமாகிய பேர் வழிபேரிலும் பொறாமைப் படுகிறான். காமத்துக்குக் கண்ணில்லை போல் பொறாமைக்கு புத்தியேயில்லை. ஆற்றாமைக்கு அறிவேயில்லை. பொறாமைக்காரன் யாதொரு முகாந்தாமுமின்றி நல்ல இடத்திலெல்லாம் பொல்லாப்புப் பண்ணிக்கொள்ளுகிறான். கண்ணான இடத்திலெல்லாம் புண்ணாகிப் போகிறான். ஒருவர் மற்றொருவரைச் சிநேகித்து யாதொரு நன்மையைச் செய்தால் அதைப் பொறுக்க மாட்டாமல் தனக்கு ஆபத்து வந்ததுபோல் அந்த சிநேகிதரிடம் ஓடி, ஐயோ! அப்பா!! அந்த சண்டாளனுக்கா தர்மம் செய்தீர்? அவன் மூத்த மகன் மூன்று மாதம் கழித்து 30 ரூபாய் அனுப்பப் போகிறதாய் மூச்சந்தியிற் கேள்விப்பட்டேன். அவன் கடைக் குட்டி மகன் கப்பல் ஏறப் போகிறதாய் கடைத் தெருவில் கேள்விப்பட்டேன் அவனுக்கு என்ன குறைச்சல்! கடலில் கொண்டுபோய் உப்பைக் கொட்டலாமா? அவனுக்குச் செய்த நலத்தை என்னைப்போல் எளியவர்களுக்குச் செய்யலாகாதா? என்று பலவாறாய்ப் பேசுவர். இப்படிப் பேச இவன் தலையில் கூழைக் காய்ச்சி ஊற்றினதார்? எண் சாண் உடம்பில் எள்ளளவு ஞானமிருந்தாலும் அவன் தன் சகோதரனின்சொல்லுக்கெல்லாம் சொட்டை சொல்வான். பேச்சிலெல்லாம் பிழை பிடிப்பான். எழுதுவதெல்லாம் ஏளனம் பண்ணுவான். பாட்டுக் கெல்லாம் பழுது சொல்வான். வேலைக் கெல்லாம் விக்னம் செய்வான். இதுவே அவனுக்கு ஆனந்தம் பொறாமைக்காரன் தன்னைக் கெடுக்கிறது மன்றி பிறனையும் கெடுக்கப் பார்க்கிறான். அவன் தன் அரிய நலங்களையும், பெரிய வரங்களையும் பிறனுடைய நன்மைக்கென்று கையாடாமல் தீமைக் கென்று கையாடுவது மன்றி மற்றோரும் அவ்வாறு செய்யும்படி அவர்களைத் தூண்டி விடுகிறான்.

இது மனுஷ இலட்சணமா? நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை. பொறாமை என்? அண்டை வீட்டுக்காரி ஆண் பிள்ளை பெற்றாளென்று முந்தின வீட்டுக்காரி முறு முறுக்கிறதினாலும், பிந்தின வீட்டுக்காரி பெரு மூச்செறிகிறதினாலும் என்ன பிரயோஜனம்?

" அழுக்காறுடை யார்க்கது சாலும் [ ஒன்னார்
வழுக்கியும் கேடீன்பது"

நம் மனதின் எரிப்பு நம்மையே தகிக்கும் நெருப்பு. எரிப்புக்காரர் வாழும் வரைப் பார்க்கிலும் நெருப்பு மழை பெய்யும் ஊர் விசேஷம் உப்பிருந்த பாண்டமும் உபாயம் இருந்த நெஞ்சமும் தட்டியுடையாமல் தானே யுடையும். ஆகையால் இதை வாசிக்கும் நண்பர்கள் ஆற்றாமை என்கிற கூற்றாமையைக் கொல்லுக. சிநேகம் பொறாமை யடையாது என்பது தேவத் திருமொழி, ஆமென்.

தா. சாமுவேல் ஜோசப் நாடார்,
அருப்புக்கோட்டை.

# முத்துச்சலாபம்.

தூத்துக்குடி;—
பொதுத்தேர்தலினிமித்தம் 8—11—26 திங்கட்கிழமை சலாபம் சுத்தியாக நிறுத்தப்பட்டது. மறுநாள் முத்துக்குளிக்க தோணிகள் சென்றன. சிப்பிகளை எலம்போட்டதில் 1000க்கு ரூ. 20-தே கிடைத்தது. மறுநாள் அதற்கும் குறைவென்று தெரியவருகிறது. 11—11—26 ல் தோணிக்காரர்களும் குளியாட்களும் கட்டுப்பாடாக தங்களுக்கு 3-ல் 2 பங்குக்கும் அல்லது குறைந்தபக்ஷம் சேர்பாதியாவது கிடைக்க வேண்டுமென்றும், மழைகாலமாயிருப்பதால் நடப்பு விகிதப்படி குளிக்கமுடியாதென்று கூறி வேலைநிறுத்தஞ் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இருந்தாலும் மறுநாள் வேலைக்குத் திரும்பினர். வெள்ளிக்கிழமை சிப்பிகளை எலம்போட்டதில் 1000-க்கு ரூ. 18 தான் கிடைத்ததாம். ஆகவே தினமானம் விலை குறைந்து கொண்டேவருகிறது. சிப்பிகளை வாங்கவும் ஜனங்கள் முன் சலாபம்மாதிரி ஆத்திரத்துடன் செல்வதில்லை மந்த கதியாய்த்தானிருக்கிறது.

# மோட்சத்திற்கு மார்க்கம்.

## ராட்டினமும் ஒரு வழி.

ஸ்ரீமான் வி ஜி. தேசாய் "யேங் இந்தியா" பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகிறார்:—

மகாத்மா காந்தி தம்வரையில் நூல் நூற்பதன் மூலமாகவும், பிறரை நூற்கச் செய்வதன் மூலமாகவும் கதிமோட்சம் அடையலாமென்று நம்புகிறார். இந்த உபதேசம் செய்வதற்கு முந்தி, ராட்டினத்திற்கும் மோட்சத்திற்குமுள்ள சம்பந்தம் நம்மவருக்கு சாதாரணமாகத் தெரியாது. ஆனால், ஜெயின மதத்தைப்பற்றி குஜராத்தி பாஷையில் எழுதியிருந்த 'விசித்தாந்த ஸாகரம்' என்ற நூலை ஒரு நாள் நான் படித்தபோது, ராட்டின நூலைப்பற்றி அதில் ஒரு முக்கியமான விஷயம் சொல்லியிருக்கக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அதாவது:— மோட்சத்திற்குப் போக விருக்கும் ஒருவனுடைய சொப்பனத்தில் தோன்றக்கூடிய 14 வஸ்துக்களில் ராட்டின நூலும் ஒன்றென அதில் கூறப்பட்டிருக்கிறது. "5 வர்ணத்தில் ஏதாவது ஒரு வர்ணமிட்ட நூலைப் பார்ப்பதுபோல் ஒருவனுக்கு சொப்பனத்தில் தோன்றி, அதே க்ஷணத்தில் விழித்தெழுந்தால், அந்த ஜென்மத்திலேயே மோட்சமடைந்து விடுகிறான்" என்று அதில் கண்டிருக்கிறது. குதிரை ஸவாரி, யானை ஸவாரி, முத்துக்கள், வைரங்கள், கோமேதகம் முதலியவற்றை மூட்டை கட்டி ஏற்றல், தாமரைத் தடாகத்தில் இறங்கல், தலையில் நெய், தேன் தாங்கிச் செல்லல், கடலில் நீந்தல், தேவர்களோடு ஆகாசத்தில் விமானத்தில் அமர்ந்திருத்தல் முதலிய காட்சிகள் சொப்பனத்தில் ஏற்படுவதைக் குறித்தும் அதே மாதிரி சொல்லப்பட்டிருக்கிறது. நூலுக்குச் சொல்லப்பட்டிருக்கிற மஹிமையைப்பற்றி மாத்திரம் இங்கு குறிப்பிட வந்தேன்.

# 20000 பவுன் நன்கொடை.

மேற்கு லண்டன் கண்வைத்திய சாலைக்கு முன் பின் தெரியாத ஒரு தனவான் தமது பெயரைச் சொல்லாமலும் எவ்விதமான தகவலுங்கொடாமலும் 20000 பவுனுக்கு ஒரு செக்கை யனுப்பியிருந்தார். அதில் கையொப்பம் போடப்பட்டிருந்ததைக் கொண்டு கிளைபாங்குகளின் மூலமும் நபர் இன்னாரென்று அறியமுடியவில்லையாம். ஆகையால் செக்கு செல்லுபடியாகாதெனச் சொல்லப்படுகிறது.

# ஒரு ரூபாய் அபராதம்.

ராவ்பகதூர் சிதம்பரஞ் செட்டியார் 'ஊழியன்' ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் மீது தொடுத்திருந்த அவதூறு வழக்கில் ஜட்ஜிமெண்டுக்காக இவ் ஐப்பசித் திங்கள் உக-ம் நாள் வாயிதாப்போடப்பட்டிருந்ததை அன்பர்கள் அறிவார்கள். பிறகு அவ்வாயிதா இராமனுதபுரத்தில் உசு-ம் தேதிக்குஒத்திப் போடப்பட்டது. உசுட யன்று பிற்பகல் கவ மணிக்கு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்திற்கு வந்தார். வந்ததும் வழக்கம்போல் பிராது கூப்பிட்டவுடன் இவ்வழக்கில் மாஜிஸ்ட்ரேட் கோவிந்த நாயர் தீர்ப்புக்கூறினார். இவ்வழக்கில் எதிரியாகிய ராய. சொக்கலிங்கன் ஆசிரியர் முறையில் விடுதலை செய்யப் பெற்றாரென்றும், அச்சிட்டு வெளியிடுவோர் என்ற முறையில் கீழ்க்காணும் கட்டுரை வெளிப்போந்தமைக்காக ஒரு ரூபாய் அபராதம் கட்ட வேண்டுமென்றும், அல்லது ஒரு நாள் வெண்காவல் தண்டனையென்றும் தீர்ப்பளித்தார். எதிரி ஒரு ரூபாய் அபராதத்தைக் கோர்ட்டில் கட்டிவிட்டுப் போட்மெயிலில் சுஇ-மணிக்குப் புறப்பட்டுவிட்டார்.

# குரங்கு டிக்கட்டுவிற்கின்றது.

இங்கிலாந்தில் செப்டம்பர்மீ 22-ந் தேதி கிறிஸ்டல் பாலஸ் ஏர்ரயில்வே ஸ்டேஷனில் ஒரு ஸ்திரீ பிரயாணி டிக்கட்டுவாங்கும் பொருட்டு ஜென்னலண்டை வந்து பணத்தை நீட்டினாள். சரேலென்று ஒரு மயிரடர்ந்த கரந்தக்கை உள்ளேயிருந்து வெளிப்புறப்பட்டு, பணத்தைப் பிடுங்கிக்கொண்டு ஏராளமான டிக்கட்டுகளை வெளியே எடுத்து வைத்தது. டிக்கட் கொடுக்க வேண்டிய குமஸ்தா சில நிமிஷங்களுக்கு முந்தித்தான் அம்மனிதக் குரங்கைக் கண்டு பயந்து ஓடிப்போனதாகத் தெரிகிறது. அக்குரங்கைக் காட்சிசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக ஒருவர் கூட்டில் வைத்துக்கொண்டு வந்திருந்தார். அதிலிருந்து அது தப்பி டிக்கட்டு குமஸ்தாவின் அறையில் புகுந்து கொண்டு குமஸ்தாவைக் கடித்தது. குமஸ்தா ஓட்டம் பிடித்தார். குரங்கு அதன்பிறகு அங்கிருந்த பணப்பையை அவிழ்த்துப் பணத்தை எண்ணிற்று. குமஸ்தாவின் பேனா முறியும் வரையில் எழுதிற்று, தந்தி இயந்திரத்தை உபயோகிக்கப் பார்த்ததில் அதுவும் முறிந்துபோயிற்று. பிறகு டிக்கட்டுகளை டிக் டிக் என்று தேதியடித்து, அதோடு கொஞ்சம் சில்லரை வைத்து வெளியே எறிந்து கொண்டேயிருந்தது. முடிவில் டிக்கட்டில்லாமல் அன்று எல்லோரும் வண்டியேறும்படி ஸ்டேஷன் மாஸ்டர் ஆக்ஞாபித்தார்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது !!

மதனசுந்தரம்.

( ஒரு துப்பறியும் இனிய தமிழ் நாவல் )

மதுரை வாலிப நாடார் சங்க காரியதரிஸி ஸ்ரீமான் கூ. அ. சங்கரலிங்க நாடாரவர்களால் எழுதப்பட்டது. "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடார் அவர்கள் முகவுரையுடன் கூடியது.

உண்மைக் காதலின் சிறப்பையும், பாலிய விவாகத்தால் ஏற்படும் கெடுதல்களையும், தாசிலோலர்கள் படும் சொல்லொணா கஷ்டங்களையும், வாலிப வயதுள்ள ஆண், பெண் இரு பாலர்களும் தனிபாக சந்திப்பதால் ஏற்படும் கெடுதல்களையும், கொலைபாதகளின் தந்திரங்களையும், அவற்றைக் கண்டு பிடித்த வீரநாதரின் திறமையையும் தெளிவாக விளக்கிக் காட்டுவது.

ஒவ்வோரில்லத்திலும் அவசியமிருக்க வேண்டிய நூல். கொஞ்சங் காப்பிகளே கைவசமிருப்பதால் உடனே வாங்கி இன்பமடையுங்கள். கீழ்கண்ட விலாசதாரிடத்திலும், "நாடார்குல மித்திரன்" புத்தகசாலையிலும், கடம்பூர், ஷாப் வியாபாரம் செ. கு. பழனிச்சாமி நாடாரிடத்திலும் கிடைக்கும்.

விலை அணா 8; தபால் சார்ஜ் வேறு.

ஆ. பச்சைய நாடார், மானேஜர்,
"நாடார் மகாஜன லாட்ஜ்," மதுரை.